ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1371/23 - 2004 දෙසැම්බර් 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2004.12.16
1371/23 ஆம் இலக்கம் – 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) – மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாணத்தின் மாகாண சபை

1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டம்

**7 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சர் சரத் ஏகநாயக்க ஆகிய நான், கீழ்க் குறிப்பிட்டுள்ள மொத்த விற்பனை வரவு வரி விகிதங்களை இக்கட்டளை மூலம் 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு /01.01.2005 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் விதித்துரைக்கின்றேன்.

| | | |
|---|---|---|
| (அ) | தங்கம், முத்து, மாணிக்கக் கற்கள், பெறுமதிவாய்ந்த அல்லது அரைவாசியாகப் பெறுமதிவாய்ந்த கற்கள் மற்றும் சிறப்புமிக்க உலோகங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் – | நூற்றுக்கு 05 |
| (ஆ) | நகைகள் மற்றும் ஆடைத்தொகுதிகளுக்கான நகை அணிகளை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் – | நூற்றுக்கு 05 |
| (இ) | மூங்கில் மரங்கள், தென்னை மரங்கள், அறுக்கப்பட்ட மரங்கள் அல்லது குற்றிகளாக மரங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் – | நூற்றுக்கு 05 |
| (ஈ) | கபினட்டுக்கள், பாதுகாப்பு பெட்டகங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்கள் உட்பட மரம், உலோகம் அல்லது பைபர் கிளாஸ் என்பனவற்றை உபயோகித்துத் தயாரிக்கப்பட்ட தளபாடங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் – | நூற்றுக்கு 05 |
| (உ) | சாராயம் (பதப்படுத்தப்பட்ட சாராயம், கலக்கப்பட்ட சாராயம் உட்பட) பியர், வைன், கள்ளு மற்றும் ஏனைய இறக்குமதி செய்யப்பட்ட மதுபான வகைகளை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் – | நூற்றுக்கு 05 |
| (ஊ) | சிகரட் உற்பத்தியாளரிடமிருந்து அல்லது சிகரட்டுக்களை இறக்குமதி செய்பவரிடமிருந்து சிகரட்டுக்களைக் கொள்வனவு செய்து சிகரட்டுக்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் – | நூற்றுக்கு 05 |

(எ) இறக்குமதி செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள்:
பீங்கான் பொருட்கள், பீங்கான் செங்கற்கள் குளியலறை மற்றும் மலசலகூட உபகரணங்கள், கண்ணாடிகள், கண்ணாடிப் பொருட்கள் என்பனவற்றை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் - நூற்றுக்கு 05

(ஏ) இறக்குமதி செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள்:-
கெமராக்கள், செல்லிடத் தொலைபேசிகள், உடற்பயிற்சி உபகரணங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் (அதிசக்திக் குளிரூட்டிகள், போத்தல் குளிரூட்டிகள், நீர்க்குளிரூட்டிகள், ஐஸ்கிரீம் தயாரிக்கும் பொறிகள் மற்றும் ஏனைய குளிரூட்டிகள் உட்பட), காற்றுப் பதணிகள், சலவைப் பொறிகள், வானொலிப் பெட்டிகள், ஒலிப்பதிவுப் பொறிகள் மற்றும் அவற்றின் மீள் உற்பத்திப் பொருட்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், தொலைக்காட்சி விம்பங்கள் மற்றும் ஒலிப்பதிவுப் பொறிகள் அத்துடன் அவற்றின் மீள் உற்பத்திப் பொருட்கள் ஏனைய மின் பொறிகள் மற்றும் கருவிகள் அத்துடன் அவற்றின் உதிரிப்பாகங்கள், பகுதிகள் என்பனவற்றை விற்பனை செய்யும் வியாபாரங்களின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் ; நூற்றுக்கு 05

(ஐ) வீதிகளில் உபயோகிப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட அல்லது சரிசெய்யப்பட்ட டிராக்டர் அல்லது டிரேலர் உட்பட இயந்திரம் மூலமாக செலுத்தப்படுகின்ற (மொபெட், பிரேத வண்டிகள், அங்கவீனமுற்றோர்களுக்கான வண்டிகள், பூரணமாக அல்லது பிரதானமாக ஆட்களை ஏற்றிச் செல்வதற்காக உற்பத்தி செய்யப்பட்ட மோட்டார் டிரைசிகல் மற்றும் இருபத்தாறு இருக்கைகளைவிடக் கூடிய பஸ் வண்டிகள் தவிர்ந்த) மோட்டார் வண்டிப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுகின்ற அல்லது பதிவு செய்யப்படாத அனைத்து மோட்டார் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மட்டப்படுத்தல், சேறு அகழ்தல், மண்ணை கொண்டு செல்லல், காடுகளை வளர்த்தல் அல்லது அதற்குச் சமமான ஏதாவதொரு செயல் போன்ற விவசாய அல்லது நிர்மாண வேலைகள் தொடர்பில் நிலப்பரப்பில் உபயோகிப்பதற்காக உத்தேசிக்கப்படும் சக்கரங்களைக் கொண்ட அல்லது சக்கரங்களற்ற இயந்திரம் மூலமாக இயக்கப்படுகின்ற காணி வாகனங்களும் உட்பட மோட்டார் வாகனங்கள் மற்றும் பொறிகள் என்பனவற்றை விற்பனை செய்யும் வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் - நூற்றுக்கு 05

(ஒ) மேலே (அ), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ) மற்றும் (ஐ) என்பனவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு வியாபாரத்தைத் தவிர்ந்த ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரங்களின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் - நூற்றுக்கு 01

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1996 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியும் 642/18 ஆம் இலக்கமும் கொண்ட 7 ஆம் இலக்கப் பிரிவின் கீழ் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் அக்கட்டளையில் செய்யப்பட்ட திருத்தங்கள் 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு /01.01.2005 ஆந் திகதி தொடக்கம் இக்கட்டளை செயற்பட்டதன் பின்பு ஏற்படும் ஏதாவதொரு மொத்த விற்பனை வரவு வரி தொடர்பிலான ஏற்புடைமை இல்லாதொழிதல் வேண்டும்.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் சமாதானமும்,உள்ளூராட்சி, கல்வி, போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, பெண்கள் விவகார, மீன்பிடி, கிராமியக் கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி அத்துடன் மத்திய மாகாண மாகாண சபையில் ஏனைய அமைச்சுக்களுக்குள் வராத விடயங்கள் பற்றியதுமான அமைச்சர் (மத்திய மாகாண சபை).

முதலமைச்சர் அலுவலகம்,
மத்திய மாகாண சபை,
2004, திசெம்பர் 08.

12-888

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.